★ ★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 ஐப்பசி 28 ஜுல்ஹஜ் 12 இதழ்: 274

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 14-11-78

நேற்று மாலை திரும்பிய 'அமிர்' தம்பதிகளுக்கு

## அமைதியான வரவேற்பு 18-ல் யாழ் விஜயம்

(கொழும்பு)

லண்டனிலிருந்து அமிர் தம்பதிகள் புறப்பட்ட சுவிஸ் ஏயர்லைன்ஸ் விமானம் (பல மணிநேரம தாமதித்துப் புறப்பட்டும்) ஜெனிவா விமான நிலையத்தில் மூடுபனிகாரணமாக தரை இறங்காமல் சூரிச்சில் தரை இறங்கியது இங்கு 30 மணிநேர தாமதத்துக்குப் பின்னர் தொடர்பிரயாண த்தை தவறவிட்ட நிலையில் தெஹ்ரான் சென்றனர். தெஹ்ரானிலிருந்து சிங்கப்பூர் ஏயர்லைன்ஸ் விமானத்தில் புறப்பட்டு, டுபாய் சென்று டுபாயிலிருந்து நேற்று மாலை 5

(6-ம் பக்கம் பார்க்க)

# "அரசுடன் சேரும் பேச்சுக்கே இடமில்லை! தமிழீழத்தை வெளிநாட்டுத் தமிழரும் ஏற்றுவிட்டனர்

# எனது வெளிநாட்டு விஜயம் பூரண வெற்றி-அமிர்

(நமது கொழும்புநிருபர் 'மாலி')

"தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு இலட்சியப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது. தமிழ் ஈழம்தான் அதன் ஒரே கொள்கை. தமிழீழத்தை அடைவதுதான் எமது இலட்சியம். எம்மைப் பொறுத்த வரை, அரசுடன் சேர்வது என்ற பேச்சுக்கே இடமில்லை. இதனைத்தான் நான் வெளிநாடுகளிலும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளேன்; அவர்களும் பூரணமாக இதனை ஏற்றுக் கொண்டுள்ளனர். வெளிநாடுகளில் உள்ள தமிழர்களும், தமிழ் நிறுவனங்களும் தமிழீழ கோரிக்கையை ஏற்றுக் கொண்டு சகல விதமான ஆதரவுகளும் வாரி வழங்கத் தயாராக நிற்கின்றார்கள். எனது வெளிநாடு விஜயம் பூரண வெற்றியைத் தந்திருக்கிறது"

இவ்வாறு, எழுபதுநாள் வெளிநாட்டு விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று மாலை தாயகம் திரும்பிய எதிர்க்கட்சித் தலைவரும், கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று இரவு அவரது உத்தியோக பூர்வமான வாசஸ்தலத்தில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

நமது இளைஞர்கள் தனிவழியில் பிரிந்து செல்லத் தீர்மானித்திருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை என்றும் திரு. அமிர்தலிங்கம் நிருபர்களுடனான இச்சந்திப்பில் தெரிவித்தார்.

"நான் சென்ற நாடுகளில் எல்லாம் முக்கிய அரசியல் தலைவர்களையும், பிரமுகர்களையும் பிரபல நிறுவனங்களின் தலைவர்களையும் சந்தித்தபோது, எமது பிரச்சனைகள் பற்றிச் சிலர் தெரிந்து வைத்திருந்தனர். இந்த அரசு வந்ததும் எமது பிரச்சனைகள் தீர்ந்துவிட்டதாகவே வேறுசிலர் கருதினர். இவர்களிடம் எமது நிலையை தெளிவாக விளக்கி; நாங்கள் இன்னும் அடிமைகளாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் — சுதந்திரத்தக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றோம் என்று கூறியதுடன், எனக்குக் கிடைத்த இச் சந்தர்ப்பத்தைப் பூரணமாகப் பயன்படுத்திக்கொண்டேன்" என்றும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

'அமிர்'ன் உத்தியோக இல்லத்துக்கு நேற்று இரவு படையெடுத்திருந்த நிருபர்களுக்கு திரு. அமிர்தலிங்கம் விரிவான முறையில் அறிக்கை அளித்தோ அல்லது மகாநாடு கூட்டியோ தனது வெளிநாட்டு விஜயம் பற்றித் தெரிவிக்காதபோதிலும், நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு மிகவும் நிதானத்துடன் பதில் அளித்தார், நிருபர்கள் கேட்ட சில கேள்விகளும் 'அமிர்' அளித்த பதில்களும் வருமாறு:-

கேள்வி: அரசுடன் கூட்டணி சேர்ந்துகொள்ளும் சாத்தியம் உண்டா?

அமிர்: எம்மைப்பொறுத்த வரை அரசுடன் சேரும் கேள்விக்கே இடமில்லை!

கேள்வி; தமிழ்ஈழக் கோரிக்கைக்கு வெளிநாடுகளில் எந்த அளவிக் ஆதரவு உண்டு?

அமிர்: எந்த அளவுக்கு ஆதரவு கிடைத்திருக்கிறது என்பதுபற்றிக் கூறுவதற்கு இது சந்தர்ப்பம் இல்லை, ஆனாலும் ஒன்றைப் பற்றி மட்டும் இங்கு கூறுகின்றேன். வெளிநாடுகளில் வாழும் தமிழர்களும், தமிழ் நிறுவனங்களும் தமிழ்ஈழக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். சகலவிதமான ஆதரவும் வழங்கத் தயாராக இருக்கின்றார்கள்.

கேள்வி; இளைஞர்கள் தனித்துச் செல்லப்போவதாக அறிவித்துள்ளனரே......?

அமிர்: தனிவழியில் செல்வதற்கு இளைஞர்கள் தீர்மானித்திருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை.



கேள்வி: எந்தெந்த நாடுகளுக்குச் சென்றீர்கள்?

அமிர்: லண்டன், ஜமைக்கா, அமெரிக்கா, கனடா, மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்று எமது இனத்தின் குரலை ஒலிக்கச்செய்துள்ளேன்.

கேள்வி: முக்கிய தலைவர்களையெல்லாம் இங்கு சந்தித்தீர்களா?

அமிர்: ஆம்! எமது பிரச்சனைபற்றி தெளிவுபடுத்தி, தமிழ்ஈழக்கொள்கை ஒன்றுதான சரியான மார்க்கம் — எமது பிரச்சனையைத் தீர்க்கக் கூடியது என்பதைக் கூறியதுடன்மட்டுமன்றி அவர்களும் இதனைப் பூரணமாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

கேள்வி; வெளிநாடுகளில் கூட்டணிக்கிளைகள் நிறுவப்படுமா?

அமிர்: லண்டனில் ஆலோசிக்கப்பட்டது கூட்டணியின் மத்திய செயற்குழுதான் இது பற்றித் தீர்மானித்து இறுதி முடிவு எடுக்கவேண்டும்.

கேள்வி: நீங்கள் இந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்துகொண்டு, வெளிநாடுகளில் இனக்குரல் எழுப்பி, இந்த அரசாங்கத்துக்கு எதிராகவும் செயல்பட்டிருக்கின்றீர்களே...?

அமிர்; நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதிலும், இலங்கைத் தமிழினத்தின் சார்பாகவே குரல் எழுப்பியுள்

(6-ம் பக்கம் பார்க்க)

## விமான நிலையத்தில்....

(கொழும்பு)

கடந்த செப்டம்பர்மாதம் மூன்றும் திகதி தமது வெளிநாடு விஜயத்தை மேற்கொண்ட அமிர் தம்பதிகள் நேற்று மாலை ஐந்துமணியளவில் ஸிங்கப்பூர் ஏயர்லைன்ஸ் விமானமூலம் தாயகம் திரும்பினார்கள்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் அமிரை வரவேற்பதற்காக திரளான மக்கள் கூடியிருந்தனர். எம்பிக்களில் கூட்டணித்தலைவர் திரு எம். சிவசிதம்பரம், மானிப்பாய் எம். பி. திரு வி. தர்மலிங்கம், வட்டுக்கோட்டை, கிளிநொச்சி எம்பிக்கள் திரு. த. திருநாவுக்கரசு, திரு. வி. ஆனந்தசங்கரி, மற்றும் கூட்டணியின் முக்கிய பிரமுகர்கள், மன்னார், புத்தளம், நீர்கொழும்பு இளைஞர்பேரவை, மகளிர் பேரவை உறுப்பினர்களும் திரண்டிருந்தனர்.

### இறங்கிய கையோடு...

விமானத்திலிருந்து அமிர் தம்பதிகள் இறங்கியதும், திரு. அமிர்தலிங்கத்தின் காரியதரிசியும் பாதுகாப்பு அதிகாரியும் முதலில் வரவேற்றனர். தமது காரியதரிசியிடம் திரு அமிர்தலிங்கம் அப்போது, 'கூட்டணி பாராளுமன்றக் குழுக் கூட்டம் இன்று இரவு இருக்கிறதா...'' என்று கேட்டார்.

விமான நிலைய விஐபி' கூடத்தில் அமிர் வரவை எதிர்பார்த்திருந்த எம் பிக்களில் முதலில் கூட்டணித் தலைவர் சிவாவும், யாழ். குருநகர் கூட்டணிக் கிளைத் தலைவர் அலோசியஸும் அமிருக்கு மாலை அணிவித்து வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து சுமார் ஒரு மணி நேரம் வரை திரு. அமிர்தலிங்கம், திரு எம். சிவசிதம்பரத்துடன் பல விஷயங்கள் பற்றி பேசி தீவிர ஆலோசனை நடத்தினர். (ம)

## லண்டனில் நடைபெற்ற சீர்திருத்தத் திருமணம்

(நமது நிருபர்)

திரு அமிர்தலிங்கத்தைச் சந்தித்து, 'விமானத்திலிருந்து நீங்கள் இறங்கும்பொழுது எந்த உணர்வோடு இருந்தீர்கள்?' என்று நான் கேட்ட போது நீங்கள் என்ன உணர்வோடு இருக்கிறீர்கள் என்று கேட்டுச் சிரித்துக் கொண்டார்.

கனத்த உள்ளத்துடனேயே அமிர் காணப்பட்டார். சில முக்கிய விஷயங்களை உடனடியாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்பு அவரிடம் காணப்பட்டது.

திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கத்திடம், தனி விசேஷம் எதுவும் உண்டா என்று நான் கேட்டபோது மகிழ்ச்சி பொங்க ஒரு செய்தியைத் தெரிவித்தார்.

'இம்மாதம் 2-ம் திகதி, எமது மகன் காண்டீபனுக்கும் ஞான சியாபளாவுக்கும் லண்டனில் வைத்து சீர்திருத்தத் திருமணத்தை சுருக்கமான முறையில் மாலைகளை மாற்றி நடத்திவைத்தோம். பூ மாலையின் விலை 30 ஸ்டர்லிங் பவுண்...' என்று திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் மகிழ்ச்சியுடன் என்னிடம் தெரிவித்தார். (ம)

### ஆசிரிய கலாசாலைகளின்

## கல்விப் பணிப்பாளரின் கொழும்புத்துறை விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியகலாசாலைகளின் கல்விப் பணிப்பாளர் திரு. டி பதிவிகார கடந்த வெள்ளியன்று கொழும்புத்துறை ஆசிரியகலாசாலைக்கு விஜயம் செய்தார்.

ஆசிரிய மாணவர்களினதும், கலாசாலையினதும் குறைகளை கேட்டறிந்துகொண்ட திரு. டதிவிகார இக்கலாசாலைக்குத்

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

ரவல் ஏஜன்ஜி லிகிதர் பதவிக்கு ஆங்கில அறிவுள்ள ஆட்கள் தேவை. ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க லாம். கந்தோர் பியோன் ஒருவரும் தேவை கடித மூலம் தொடர்பு கொள்க. விளம்பர இல. 0788, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 0788

எனது இல.
எல்சஜி/எல்/294/ஜே

### பிரசித்த ஏலவிற்பனவு

1978-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ந் திகதி வியாழக் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் காரைநகர், காரைநகர் வடக்கு வாசி களாகிய மயில்வாகனம் ராஜா நடராசாவும் மனைவி இராசமணி, மேலும் சின்னப் பொடியார் வேலுப்பிள்ளை யும் மனைவி பொன்னம்மாவும் 1967-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9-ந் திகதி பிரசித்த நொத்தாரிசு அ. தனபாலசிங் கம் அவர்களால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 6176-ம் இலக் கம் கொண்ட ஈட்டு உறுதிப் படி 28-02-78 வரைக்கும் கட் டத்தவறிய ரூபா 26 611 சதம் 88. இதில் 28-2-78 பின் கொடுக்கப்பட்ட தொகை கழிவாக மேலும் ரூபா 16,085க்கு 1-3-78 தொடக் கம் விற்பனவு நாள் வரையும் 5½ வீத வட்டியும் சேர்த்து முழுத்தொகையையும் அறவிட குறிப்பிட்ட ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடவேண்டிய அபராதத்தொகையையும் இக் கடன் தொகையை மீட்பதற்கு ஏற்பட்ட செலவுத்தொகையை யும் அறவிடுவதற்காக யாழ்ப் பாணம் தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளரின் உத் தரவின்படியும் எனக்குக் கிடைத்த அதிகாரத்தின்படி யும் கீழ் அட்டவணையில் காட் டப்பட்ட காணியையும் கல் வீட்டையும், கிணற்றையும் அதற்குச் சேர்ந்தவைகளையும் அக்காணிக்குள் நின்று பிர சித்த ஏலத்தில் என்னால் விற் கப்படும்.

மேலதிகவிபரங்கள் தேவைப் படுவோர் யாழ்ப்பாணம் கண்டி வீதியிலுள்ள தேசிய வீடமைப்பு உதவி ஆணை யாளர் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

**காணியின் அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப் பாணம் மாவட்டம், தீவுப் பகுதி, காரைதீவு கோவிற் பற்று வலந்தலை இறை, வட் டக்கிராயும், மாப்பன் ஊரி யும்'' நில பர. 7½ (பதிவு இல சி. 273/71) ஆனால் தற் போது அளவையின்படி நில பர 8, உத்தரவு பெற்ற உலாந்தா த. கந்தையா அவர்களால் 1966-10-10-ந் திகதி கொண்டதும் 3016-ம் இலக்கம் கொண்ட படத்தில் தயாரிக்கப்பட்ட வடக்குப் பக்கமாக நிந்தமான காணி. நில பர. 6 (ஆறு) பதிவு இல. சி. 292/184, எல்லை கிழக்கு, கிராமச்சங்கத்தின் றோட், வடக்கு வேலுப்பிள்ளை இராசதுரையின் ஆதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு பி எஸ். வேலுப்பிள்ளையின் ஆதனம். கிணறும் தற்காலிக மாகப் போடப்பட்ட குடிசை களும் கட்டப்பட்ட கல்வீடும் வான்பயிர் செய்பயிர்களும் இதடங்கலும்.

சி. செ. மாரிமுத்து,
நீதிமன்றத்தின்
விற்பனவு ஆணையாளரும்
ஏலதாரரும்

விதானை வளவு,
சித்தன்கேணி,
திகதி: 31-10-1978

0787

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## சுவீப் முடிவுகள்

[கொழும்பு]

நேற்றுமுன் தினம் இழுக்கப் பட்ட 689-வது தேசிய லொத்தர் சபை சுவீப் முடிவு கள் வருமாறு:

1-ம் பரிசு:

**26 V 0606**

ரூபா 1,00,000

2-ம் பரிசு:

**09 E 0750**

ரூபா 40,000

3-ம் பரிசு:

**04 W 0982**

ரூபா 10,000

தலா 1,522ரூபா 50 சதம் பெறும் நூறு டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 09 A 0456 | 14 A 0950 |
| 18 A 0931 | 24 A 0913 |
| 25 A 0226 | 13 B 0210 |
| 16 B 0203 | 20 B 0914 |
| 22 B 0475 | 26 B 0387 |
| 32 B 0692 | 09 C 0668 |
| 10 C 0118 | 11 C 0447 |
| 13 C 0868 | 31 C 0690 |
| 04 D 0707 | 07 D 0298 |
| 08 D 0719 | 25 D 0848 |
| 27 D 0821 | 31 D 0241 |
| 06 E 0348 | 06 E 0817 |
| 09 E 0193 | 10 E 0573 |
| 02 F 0248 | 04 F 0157 |
| 19 F 0397 | 22 F 0345 |
| 24 F 0525 | 25 F 0492 |
| 31 F 0662 | 02 G 0825 |
| 06 G 0356 | 08 G 0199 |
| 10 H 0432 | 04 J 0830 |
| 20 J 0096 | 24 J 0837 |
| 02 K 0404 | 23 K 0252 |
| 32 K 0812 | 05 L 0248 |
| 03 N 0945 | 06 N 0158 |
| 06 N 0687 | 12 N 0830 |
| 20 N 0718 | 25 N 0935 |
| 30 N 0551 | 06 O 0477 |
| 11 O 0511 | 14 O 0591 |
| 24 O 0641 | 22 O 0530 |
| 26 O 0239 | 28 O 0051 |
| 30 O 0733 | 02 P 0313 |
| 01 P 0917 | 15 P 0246 |
| 20 P 0306 | 20 P 0500 |
| 11 Q 0514 | 19 Q 0031 |
| 23 Q 0450 | 29 Q 0076 |
| 31 Q 0057 | 04 R 0698 |
| 15 R 0712 | 07 R 0240 |
| 05 R 0005 | 25 R 0581 |
| 28 R 0018 | 09 S 0324 |
| 10 S 0475 | 30 S 0958 |
| 09 T 0058 | 20 T 0224 |
| 22 T 0904 | 25 T 0885 |
| 26 T 0322 | 31 T 0962 |
| 05 U 0602 | 19 V 0818 |
| 22 V 0513 | 27 V 0585 |
| 06 W 0962 | 07 W 0903 |
| 31 W 0169 | 12 X 0227 |
| 20 X 0411 | 01 Y 0375 |
| 07 Y 0624 | 15 Y 0815 |
| 23 Y 0429 | 23 Y 0805 |
| 25 Y 0138 | 27 Z 0644 |

(இவை யாவும் உறுதிப்படுத் தப்படவேண்டும்)

## புதிய பஸ் சேவை

(வவனியா)

வவனியாவிலிருந்து வாரிக் குட்டியூர் வழியாகப் பாவற் குளத்திற்கு புதிய பஸ்சேவை ஒன்று வவனியா டிப்போவி னால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பஸ் சேவையை வவ னியா மாவட்ட அமைச்சர் திரு. ஜீ. டீ. மகிந்தசோமா, நாடாவெட்டி திறந்துவைத்த முதல் பயணச் சீட்டைப் பெற்று ஆரம்பித்துவைத் தார். வவனியா டிப்போவிலி ருந்தே இச்சேவை ஆரம்பமா னது.

இச்சேவையை ஆரம்பித் தது குறித்து. பாவற்குள கிராம அபிவிருத்திச் சங்கம் வவனியா எம். பி. திரு தா சிவசிதம்பரத்திற்கு நன்றி தெரிவித்துள்ளது. [உ]

## மாசிக்கு பதில்...

(கொழும்பு)

மாசிக்குப் பதிலாக மீன்பிடி அமைச்சு நோர்வே நிறுவனத் தின் ஒத்துழைப்போடு மீனி லிருந்து உற்பத்தி செய்யப் பட்ட 'ரசஜீவா' என்ற ஒருவகை உலர வைத்த மீனை பாவனைக்குக் கொண்டுவரவுள் ளது. [ஊ]

# "திருமலை, மட்டுநகர், அம்பாறை என மூன்று பிரிவுகளானது நன்மைதரும்"

## அரசு நடவடிக்கைக்கு உப-தபாலதிபர் சங்கம் பாராட்டு

(மட்டக்களப்பு)

''அரசின் முற்போக்குத் திட்டத்தின்படி மேலும் ஐந்துபெரும்பாக அத்தியட்ச கர்கள் பிரிவுகளை ஏற்படுத்தி யுள்ளது. அதற்கமைய கிழக்கு மாகாணத்தில் ஒன்றாக இயங்கி வந்த பகுதிகள் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோண மலை என மூன்று பிரிவுகளாக் கப்பட்டுள்ளது பிராந்திய அடிப்படையிலான தேவை களை விரைவாகவும், தெளி வாகவும் செயல்படுத்த இதன் மூலம் முடியும்''

இவ்வாறு அகில இலங்கை தமிழ்பேசும் உபதபாலதிபர் களின் சங்க மட்டக்களப்புக் கிளையின் நிர்வாகசபைக்கூட் டத்தில் கிளைத்தலைவர் திரு எஸ். தவராஜா பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனவின் தலைமையி லான ஐ. தே. க. அரசு நாம் பல வருடங்களாக கோரிவந்த பென்ஷன் திட்டத்திற்குப் பதிலாக சகாயநிதி வழங்க முன்வந்துள்ளது. அதற்கான பத்திரங்களையும் திணைக்களம் ஒவ்வொரு உபதபாலதிபர்க ளுக்கும் அனுப்பிவைத்துள் ளது'' என்றார்.

பெரும்பாக அத்தியட்சகர் திரு. ஏ சி கந்தசாமியின் சேவையையும் அவர்பாராட்டி னார்.

கிளைப் போஷகரும் தாய்ச் சங்கத் தலைவருமான திரு. வி. கதிர்காமத்தம்பியும் கூட்டத் தில் கலந்துகொண்டார். (உ)

## இன்றைய இராசிப்பலன்

ஐப்பசி மாதம் 28-ந் திகதி செவ்வாய்க்கிழமை (14-11-78)

மேடம்:- தொழில் துறை யில் கவலை அதிகரிக்கும், உடல் நலமும் பாதிக்கப்படக் கூடும், சுகாதாரம் வேண்டும், கிழர்ப் பிரயாணத்திற்கும் இடமுண்டு.

இடபம்:- காதல் விவகா ரங்களுக்கும் இடமுண்டு, கடமையாற்றும் இடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும், தூரத்துச் செய்தியொன்று உற்சாகத்தை ஏற்படுத்தும்.

மிதுனம்:- வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும், எதிலும் தாக்கமனப்பான்மை உருவாகும், மனத்திடம் வேண் டும்.

கடகம்:- குடும்பத்தில் தென்றல் வீசும், வரவிலும் திருப்திக்கிடமுண்டு, தாய்வழி ஆதரவும் உண்டு.

சிங்கம்:- இதயம் இன்ப த்தில் விம்மும், இல்லத்திலும் இனிமை தவழும், புத்திர வழியாலும் புகழ் வந்து சேரும், தெய்வத்தின் துணை யும் கிடைக்கும்.

கன்னி:- எடுத்தக் காரி யத்தில் தாமதம் ஏற்படும், எதிரிகள் தாக்குவர், எதிர் பார்த்தமுடிவில் ஏமாற்றம் தென்படும்.

துலாம்:- கரும்புபோல் வாழ்க்கை இனிக்கும், களஸ் திர வழியாலும் சுகம் கிடைக் கும், காதலர்களுக்கு கவர்ச்சி கரமான தினம்.

விருச்சிகம்:- குடும்பத் தில் பிரச்னைகள் தலைதூக் கும், விரக்தி மனப்பான்மை யும் தென்படும், பொறுமை யுடன் நடப்பது நன்று.

தனுசு:- தக்க சமயத் தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும், தெய்வநம்பிக்கை மேலிடும், நினைத்ததை சாதிப் பதில் இன்று முன்னிலையில் நிற்பீர்கள்.

மகரம்:- தொழில்துறை யில் புதிய வெற்றிகள் கிடை க்கும், சிலர் வாழ்க்கையில் கடல்கடந்த பிரயாணம் ஒன் றும் மேற்கொள்ளப்படலாம், சுபதினம்.

கும்பம்:- வணிகத்துறை யில் முன்னேற்றம் காணப்ப டும், நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும், பெரியோர் ஆதரவிற்கும் இட முண்டு.

மீனம்: துன்பத்தின் நிழ லாட்டம் உங்களைத் தொ ரும், பொருள் விரயத்திற் கும் இடமுண்டு, புதிய முத லீட்டைத் தவிர்த்துக் கொள் ளவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## இலங்கை மக்களுக்கு பாப்பரசர் வாழ்த்து

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்திற்குச் சென் றிருந்த வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் நேற்றுத் தாயகம் திரும்பி னார்.

ஐ. நா விலிருந்து தாயகம் வரும் வழியில், ஜனாப் ஹமீத் ரோமாபுரிக்கும் சென்றார். இங்கு, அவர் பரிசுத்த பாப் பரசர் இரண்டாவது அருளப் பர் சின்னப்பரைத் தரிசித் தார்.

''இலங்கையில் மனித நீதி மதிக்கப்படுகிறது. இலங்கை மக்கள் நீடூழி வாழ்க'' என்று ஜனாப் ஹமீத்திடம் பாப்பர சர் வாழ்த்துத் தெரிவித்தார்.

## "ஒற்றுமையினால் ஒரு நன்மையும் கிடைக்கவில்லை"

(யாழ்ப்பாணம்)

''ஒற்றுமையினால் தமிழினத் திற்கு ஒரு நன்மையும் கிடைக்கவில்லை. முன்பிலும் பார்க்க மிகக் குறைந்த கீழான நிலைக்கு தமிழினம் தள்ளப் பட்டுள்ளது''.

பாசையூரில் நடந்த தமிழ்க் காங்கிரஸ் பிரசார கூட்டத் தில் பேசிய தமிழ்காங்கிரஸ் தலைவர் திரு. ரி. சங்கரப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரியர் இம்மனுவேல் தலை மையில் நடந்த கூட்டத்தில் திரு. ரி. சங்கரப்பிள்ளை மேலும் கூறியதாவது:- சம ஷ்டி அமைப்பில் தமிழரசு நிறு வுவோம் என்று 30 ஆண்டுகள் கூறிவந்தவர்கள் 1972-ம் அந் தக்கோரிக்கையைக் கைவிட்ட னர். தமிழ்க் கட்சிகள் ஒற் றுமைப்படவேண்டும் என்றும் ஒற்றுமையை உருவாக்கினால் தான் 'தமிழ் ஈழம்' மலரும் என்றும் கூறினார்கள்.

தமிழினத்தின் ஏகோபித்த ஆதரவு கிடைத்தபின்னர், அந்த ஒற்றுமையை தமிழினத் திற்கு பாதகமாக பாவித்து விட்டார்கள். தமிழினம் ஒற் றுமைப்பட்டதால் எவ்வித பயனும் கிடைக்கவில்லை.

காங்கிரஸ் பொதுச் செய லாளர் திரு. ஜி. ஜி பொன் னம்பலம் பேசும்போது, இம் மாதம் 26ம் திகதி நடை பெறவிருக்கும் காங்கிரஸ் வரு டாந்த மாநாட்டில் யாப்பு திருத்துவது பற்றி ஆலோசிக் கப்படவிருப்பதாக கூறினார்.

அவர் மேலும் கூறியதா வது;- 1944ம் ஆண்டு தமிழ்க் காங்கிரஸ் யாப்பு உருவாக் கப்பட்டபோது நாட்டின் சுய ராஜ்யம் முக்கிய கொள்கை யாக இருந்தது. 1956ம் ஆண்டு தமிழினம் சமஷ்டி கோரிக்கைக்கு பெரும்பான் மையாக ஆதரவளித்த போதி லும் தமிழ்காங்கிரஸ், அதனை பின்பற்றி யாப்பை திருத்த வில்லை. காங்கிரஸ் கொள் கைக்கு அதன்பின் ஒவ்வொரு தேர்தலிலும் ஆதரவு அதி கரித்து வந்தது என்றார்.

திருவாளர்கள் வி. செந்தி வேல், அந்தோனிப்பிள்ளை, சி. கிளெமெண்ட், ஏ செபஸ் தியாம்பிள்ளை ஆகியோர் பேசினார்கள். (சு)

## இளைஞர் புகார்

(வேலணை)

முழங்காவில் குடியேற்றத் திட்டத்தில் சேருவதற்கு சென்ற வருடம் பணம் கட்டிய தீவுப்பகுதி இளைஞர்களுக்கு இதுவரை காணி வழங்கப் படாததுடன் அவர்கள் கட் டிய 1500 ரூபா திருப்பிக் கொடுபடவில்லை என தொகுதி எம். பி க்கும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கும் காணி விவசாய அமைச்சருக்கும் மகஜர் அனுப்பிவைக்கப்பட் டுள்ளது. (உ)


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 626-ம் இலக்க வழக்கில பாலுக்காடு காரைநகர் மேற்கு காரைநகர் வாசி யாகிய ஆறுமுகம்பிள்ளை கதிரவேலுவுக்கு விற்பனவு திகதி வரை போமதியாக தீர்த்த தொகை ரூபா 2805-82 சதமும் வழக்குச் செலவு ரூ. 530-16 சதம் விற்பனவுச் செலவுகளும் இத்தொகையை பிரதிவாதிகளாகிய கொட்டைப்புலம் களபூமி காரைநகர் வேலுப்பிள்ளை திருநாவுக் கரசுவிடமும் பெண் இராசபூபதியிடமும் அற விடுவதற்காக எனக்கு கோட்டால் அளித்த அதிகாரத்தின் படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனத்தை 20-11-78-ந் திகதி முற்பகல் 10-30 மணி தொடக்கம் அவ் வாதனத்தில் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுப் பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு கிழக்கிறை ''பிவெளி'' பர. நெல் இலா 20¾ இருபதேமுக் கால் எல்லை கிழக்கு சிதம்பரப்பிள்ளை இராமலிங்கத்தினுத னம், வடக்கு வாய்க்கால், தோப்புக்காடு சுப்பிரமணிய சுவாமி கோயிலாதனமும், மேற்கு குறித்த சுப்பிரமணிய சுவாமிகோயிலாதனமும், ஆ. சண்முகம் ஆறுமுகத்தினதும் தெற்கு ஆ. சண்முகத்துக்கும் சுட்பர் கணபதிப்பிள்ளையின் மனைவிக்குரிய ஆதனங்கள் இதடக்கலும் முற்பதிவு இல C 397/184

செ. விசாகரத்தினம்,
விற்பனவு ஆணையாளர்.

133, பருத்தித்துறை றோட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
30-10-78.

0789

# "தமிழ் அகதிகளுக்காக சிறையில் ஒருநாள் உணவு தியாகம்செய்தோம்"

## வகுப்புவாதத்துக்கு எதிராக முடிந்தவாறு பிரசாரம் செய்தோம்

### மக்கள் விடுதலை முன்னணிச் செயலாளர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"தமிழ் அகதிகளுக்காக சிறையில் இருந்துகொண்டே நாம் ஒருநாள் உணவைத் தியாகம்செய்தோம், வகுப்புவாதத்தை எதிர்த்துஎமது இயக்கத்தின் பத்திரிகை, பிரசுரங்கள் மூலமும், பல கூட்டங்களை நடத்தியும் பிரசாரம் செய்தோம். கொடூரஅடக்குமுறைக்கு உள்ளாகியிருந்த அந்த வேளையிலும் எம்மாலான முயற்சிகளை வகுப்புவாதத்துக்கு எதிராக மேற்கொண்டோம்"

மக்கள் விடுதலை முன்னணிச் செயலாளர் திரு. லயனல் போப்பகே விடுத்துள்ள ஓர் அறிக்கையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் யாழ். முற்றவெளியில் நடைபெற்ற தமிழ் இளைஞர் பேரவைக் கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி பற்றித் தெரிவிக்கப் பட்டகருத்துக்களுக்கு பதிலளிக்குமுகமாக வெளியிடப் பட்டுள்ள அவ்வறிக்கையின் விபரம் வருமாறு;-

1978 நவம்பர் 1ம், 2ம் திகதிய பத்திரிகைகளில் வெளியான ஒரு செய்தியில், தமிழ் பேசும் முதலாளித்துவ வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்களில் ஒருவர்... "தமிழர்களைச் சந்தேகிப்பவர்கள் அவர்கள். 1977 ஆகஸ்ட் கலவரத்தின்போதுதென்இலங்கையில் தமிழர்களைக் காப்பாற்ற விரும்பாதவர்கள் அவர்கள். அவர்கள் தானா தமிழினத்துக்கு வாழ்வு அளிக்கப் போகிறார்கள்?" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

உண்மையிலேயே எமக்கு, தமிழ்மக்களிடத்தில் சந்தேகம் இருந்திருப்பின் அதனை எமது நடவடிக்கைகள் மூலமாக மக்கள் அறிந்திருக்கலாம். ஆனால் எமது நடவடிக்கைகள் தீவிரமாக இருந்த 1971 ஏப்ரல் முதல் அவ்வருட இறுதி வரையிலான காலகட்டத்தை ஒரு முறை திரும்பிப் பார்த்தீர்களானால் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையீனமான செயல்கள் ஏதும் எம்மால் நடத்தப்படவில்லை என்பதைத் தெளிவாகக் காணமுடியும். 1977ம் ஆகஸ்ட் இனக்கலவரத்தின் போது தமிழ்மக்களைப் பாதுகாக்க நாம் எதுவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும் கூறப்படுகின்றது. அக்காலகட்டத்தில் உண்மையில் நடந்தது என்ன? 1977 ஆண்டில் எமதுகட்சி ஒருமித்தும் தனித்தும் இலங்கையின் பிரதானமான நகரங்களான கொழும்பு, திருகோணமலை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் வகுப்புவாதத்துக்கு எதிராக, இனக்கலவரங்களைக்கண்டித்து பல கூட்டங்களை நடத்தியது, அக்காலகட்டத்திலே எமது பத்திரிகைகள், பிரசுரங்கள் மூலமாக வகுப்புவாதத்தையும் இனக்கலவரத்தையும் கண்டித்தோம். கொடூர அடக்குமுறைகளினால் நசுக்கப்பட்ட இயக்கமாக எமது கட்சி அச்சந்தர்ப்பத்தில் விளங்கினாலும் அது தன்னாலான சகல முயற்சிகளையும் வகுப்புவாதத்திற்கு எதிராக மேற்கொண்டது.

நாம் சிறையில் இருக்கும்சமயத்தில் சந்ததியாரும் எம்முடன் இருந்தார். ஆனால் உரிமைகள் என்றவகையில் பார்க்கும்பொழுது நாம் அவரையும் அவருடனிருந்த ஏனையோரையும்விடக் கூடுதலான உரிமைகள் மறுக்கப்பட்டே சிறைவாசத்தை அனுபவித்தோம்.

### ஒருநாள் உணவு தியாகம்

1971 ஏப்ரல் கிளர்ச்சி தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு சிறையிலிருந்த நாமும் எமது தோழர்களும் 1977ஆகஸ்ட் இனக்கலவரத்தைப்பற்றி கேள்வியுற்று மிகவும் மனவேதனையடைந்ததுடன் உடைமைகளை இழந்து அகதிகளாக முகாம்களில் தங்கிய தமிழ்மக்களுக்காக ஒருநாள் உணவைத் தியாகம்செய்து, அவ்வுணவை 'எமக்குவழங்காமல் அந்தஅகதிகளுக்கு வழங்குங்கள்' என்று சிறைச்சாலை உயர்அதிகாரிகளுக்குக்கூறி அதன்படிக்குச் செய்வித்தோம் என்பதையாவது அவர் அறிவாரா?

சிறைச்சாலையிலிருந்த வகுப்புவாத, தமிழ்த் துவேஷம் கொண்ட சிறையதிகாரிகள் அங்குள்ள தமிழ் இளைஞர்களுக்கு எதிராகக் கொடுமையான முறையில் நடந்துகொள்ள முயன்றபொழுது அதனைக் கண்டித்து ஆக்ரோஷமாகக் குரல் எழுப்பியவர்கள் நாங்கள். மக்கள் விடுதலை முன்னனித் தோழர்களது ஐக்கியத்தினாலும் வலிமையினாலும் சர்வாதிகாரிகள் அவ்வாறு நடந்துகொள்ள இயலாதுபோனதை அவர் ஏன் மறந்துவிட்டார்? அது மட்டுமல்ல, மக்கள் விடுதலை முன்னணித் தோழர்கள் இல்லாதிருந்த சிறைகளில் இருந்த தமிழர்களுக்கு எதிராக வகுப்புவாதிகளான ஒரு சில சிறைச்சாலை அதிகாரிகள் நடந்துகொண்ட விதத்தை அவர் அறிவாரா? உண்மையிலேயே அவர் இவற்றையெல்லாம் அறிந்தே வைத்துள்ளார். ஆனால் தனது அரசியல் வஞ்சனையால் அவற்றையெல்லாம் மறைத்துவிட்டார்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதிய தலைவர்கள் மட்டுமல்ல, இளைய தலைமுறைத் தலைவர்களும் தமிழ்மக்களை எந்நாளும் ஏமாற்றமுடியாது தமிழ்மக்கள் இன்று அவர்களின் தலைமையில் நம்பிக்கை இழந்துவருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலும், மலைநாட்டிலும் வாழும் தமிழர்களைத் தமது மக்கள் விடுதலை முன்னணியில் ஏன் சேர்த்துக்கொள்ளவில்லை என்பதற்கான காரணத்தைச் சிறையில் வைத்து அவரிடம் தோழர் ரோகண விஜயவீர தெரிவித்ததாகவும் அவர் கூறியுள்ளார். அத்தகைய பேச்சின் மூலம் தமிழ்மக்களை ஏமாற்றுவதற்கு அவர் முயற்சித்துள்ளார் என்றே தெரிகிறது.

1971ன் முன்னர் யாழ்ப்பாணத்திலும், மலையகத்திலும் மக்கள் விடுதலை முன்னணி செயல்படாதிருந்தமைக்கான காரணத்தை தெளிவுபடுத்தி ம. வி. மு அறிக்கை விட்டிருந்தது. அதுமட்டுமல்ல குற்றவியல் நீதிஆணைக்குழுவின் முன்னே, 1973-10-23ம் திகதியன்று தோழர் ரோகண விஜயவீர அளித்த வாக்குமூலத்தில், "...பல்கலைக் கழகங்களில் குறைந்தளவு எண்ணிக்கையுள்ள சிறுபான்மை இன தோழர்களுடனேயே நாம் தொடர்புகொண்டிருந்தோம்; ஆனாலும் சிறுபான்மை இன தோழர்களை எம்முடன் இணைக்க இயலாதுபோனது பெரிய துரதிருஷ்டமே நான்கு பல்கலைக் கழகங்களிலும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த தோழர்கள் இருக்கவில்லை... எமது தோழர்கள் பலருக்கு வடக்கைச் சேர்ந்த தோழர்களுடன் கருத்து பரிமாற்றம் செய்துகொள்வதற்கு இயலாதிருந்தது. ஏனென்றால் எமது தோழர்களில் சிலரே ஆங்கிலம் தெரிந்திருந்தார்கள். அதனால் ஒரு குறிப்பிட்ட சில தோழர்களுடன் மட்டுமே அரசியல் கலந்துரையாடல் நடந்துமுடிந்தது... இதனால்தான் தமிழ்ப் பிரதேசங்களில் எமது இயக்கத்திற்கு விரிவானமுறையில் அத்திபாரம்போட முடியாது போயிற்று" என்றும் 1958ம் ஆண்டளவில் நிகழ்ந்த இனக்கலவரத்தின்போதும் நாம் வகுப்புவாதத்திற்கு எதிராகவே இருந்தோம், என்றும் இந்நாட்டிலுள்ள பழைய அரசியல் இயக்கங்கள் வகுப்புவாத நெருக்கடிகளை தனது சுயலாபத்திற்கு பயன்படுத்தியமையினால் தமிழ்ப்பிரதேசங்களில் எமது இயக்கத்தை விரிவானமுறையில் வளர்க்க இயலாது போய்விட்டது..." என்றும் தெரிவித்திருந்ததையும் அவர் நன்கு அறிவார்

1973ம் ஆண்டிலேயே வகுப்புவாதமற்ற கருத்துக்களை இவ்வாறாக வெளியிட்ட தோழர் ரோகண விஜயவீராவை சந்ததியார் 1976ம் ஆண்டில்தான் சந்தித்தார். இச்சந்திப்பின்போதே விஜேவீரா தன்னிடம் மாறுபட்ட கருத்துக்களைக் கூறியதாகவும் அவர் கூறுகிறார். இது எவ்வாறு இருக்க முடியும்?

தமிழ்மக்கள், அவரைவிட நன்கு ஆராய்ந்துதான் பார்ப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

### துவாய் விஷயம்

சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்த திரு. ரோகண விஜயவீர சிறைச்சாலையில் ஒரு தமிழ் இளைஞர் தமக்குத் துவாய் ஒன்றைத் தந்து தமது யானத்தலைக் காப்பாற்றியதாகவும் அதனாலேயே தாம் இங்கு வந்ததும் அவரின் வீட்டுக்குப் போய் சாப்பிட்டதாகவும் கூறினார். என்று சந்ததியார் பேசியதாகவும் செய்தியில் உள்ளது. அத்துடன், "சிறைச்சாலையில் அவருக்கு நாங்கள் எத்தனையோ உதவிகளைச் செய்தோம். அவற்றையெல்லாம் அவர் வெளியிடவில்லை. என்றும் சநததியார் கூறியதாக மேற்படி செய்தியில் உள்ளது

நாம் சிறைச்சாலையில் குற்றம் செய்தகைதிகளாக இருந்த சமயத்தில் சந்ததியாரும விளக்கமறியலில் இருந்தார். அதனால் அவர் எம்மைவிட கூடுதல் உரிமைகளை அனுபவிக்கக் கூடியவராய் இருந்தார். தோழர் விஜயவீரனின் தம்பி கொண்டுவந்த சாப்பாட்டுப் பார்சலை விளக்கமறியலிருந்த தமிழ்க்கைதிகள் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடியதாய் இருந்தது உண்மைதான். இதுமட்டுமல்ல, நி மா!ண் சிறையிலிருந்த வர்களுடன் நாமும், எமமுடன் அவர்களும் ஒன்றாக உணவருந்திய சந்தர்ப்பங்களும் பல உண்டு. இதில் ஒன்றும் புதுமை இருப்பதாகத் தெரியவில்லை. இது பழைய பாரம்பரிய சம்பிரதாயம், அவர்கள் செய்தஉதவிகளை யாழ்ப்பாணம் கூட்டத்தில் தோழர் ரோகணவிஜவீர தெரிவிக்கவில்லை என்று கூறும் அவர் எமக்கு முன்பே விடுதலையாகி வெளியே வந்தவர். சிறையில அவரும் ஏனைய தமிழ் இளைஞர்களும் இருக்கும்போது அவர்களுக்கு விரோதமாக சிறைச்சாலை அதிகாரிகள் வகுப்புவாத ரீதியில் செயல்பட்டபொழுது அதனைக் கண்டித்து மக்கள் விடுதலை முன்னணியினர் எச்சரித்ததைப் பற்றி எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவர் கருத்துவெளியிட வில்லையே? ஏன்?

அவர்கள் செய்த உதவிகள் பற்றி நாம் எதவும் சொல்லவில்லை என்று கூறும் அவர் எமக்கு முன்பே விடுதலையாகி வெளியே வந்து இவ்வளவு காலம் கடந்திருந்தும் இதுவரையில் நாம் அவர்களுக்கு அங்கு செய்த உதவிகள் பற்றி ஏன் இன்னும் குறிப்பிட வில்லை என்று நாம் கேட்கலாம் அல்லவா? ஆனால் நாம் அப்படிக் கேட்க விரும்பவில்லை,

ஆனாலும், மக்கள் விடுதலை மூன்னணி பொதுச் செயலாளர் தோழர் உபதிஸ லகமநாயகா அக்கூட்டத்தில் அது பற்றி மிக விளக்கமாகத் தெரிவித்தார்.

அடுத்ததாக அவர் திரித்துச் சொன்னது 'மக்கள் விடுதலை மூன்னணியின் ஐந்து வகுப்புகள்பற்றியது அவர் அதனை தெரிவித்திருக்கும் ஒழுங்குமுறையைப் பார்த்தால் அவர் கூறியது அத்தனையும் திரித்துக் கூறப்பட்டது என்றே கொள்ளக்கூடியதாயுள்ளது. தமிழ்ப் பேசும் மக்கள் அறிய வேண்டுமென்பதற்காக எமது ஐந்து வகுப்புகளின் தலைப்புகளை ஒழுங்குபடுத்திக் கூறுகிறோம்.

1. "பொருளாதார நெருக்கடி" 2. "சுதந்திரமும் குடியேற்றவாத தந்திரமும்" 3. "இந்திய விஸ்தரிப்புவாதம் இலங்கையைப் பாதிக்கும் விதம்" 4. "இலங்கையில் இடதுசாரிகள் இயக்கம். 5. இலங்கையில் புரட்சியை நடத்துவது எப்படி? மேற்படி ஐந்து தலைப்புகளி

(6-ம் பக்கம் பார்க்க)

---

## வடக்கு எம். பிக்களின் ஒத்துழைப்பு

பனம் பொருள் அபிவிருத்தியில் அரசாங்கம் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் வடபகுதி எம். பிக்கள் உதவியும் ஒத்துழைப்பும் அளிப்பதென்று தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவரும் பதில் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. எம். சிவசிதம்பரம் அறிவித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

பனம்பொருள் அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென்றும் பனம்பொருள் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படவேண்டுமென்றும் நீண்டகாலமாக வடபகுதியிலிருந்து குரல் எடுக்கப்பட்டு வந்திருக்கிறது. பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆட்சி மன்றத்தில் பனம் பொருள் அபிவிருத்திச் சபையொன்று நிறுவப்படவேண்டுமென்று கொண்டு வரப்பட்ட தனியார் பிரேரணை நிறைவேற்றப்பட்டது இப்பொழுதுதான் அந்தத் தீர்மானம் செயல் உருப்பெறுகிறது.

பனம்பொருள் அபிவிருத்திச்சபை நிறுவப்பட்டு அதன் தலைமைச் செயலகம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டிருக்கிறது. தலைநகரான கொழும்புக்கு வெளியே ஒரு தலைமைச் செயலகம் திறக்கப்பட்டிருப்பது இதுதான் முதல் தடவை. தோட்ட கைத்தொழில் அமைச்சர் திரு. எம். டி எச். ஜயவர்த்தன இச்செயலகத்தைத் திறந்து வைத்தபோது அந்த வைபவத்தில் வடபகுதி எம். பிக்கள் கலந்துகொண்டதும் பனம்பொருள் அபிவிருத்திக்காக எடுக்கப்படும் சகல நடவடிக்கைகளுக்கும் உதவியும் ஒத்துழைப்பும் அளிப்பதாக உறுதியளித்ததும் வரவேற்கத்தக்கது.

பனம்பொருள் அபிவிருத்தியில் தான் இனி வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரம் பெரிதும் தங்கியிருக்கிறது. பல லட்சம் பனை மரங்கள் வடக்கிலிருந்தும் சில ஆயிரம் பனைகளிலிருந்தே இதுவரை பயன்பெறப்பட்டுள்ளது.

பனம்பொருள் அபிவிருத்திச்சபை அதிக அளவில் பனை மரங்களைப் பயன்படுத்துவதற்கும் இளைஞர்கள் பலருக்கு வேலைவாய்ப்பளிப்பதற்கும் திட்டங்கள் தீட்டியிருக்கிறது.

பனம்பொருள் அபிவிருத்திமூலம் இரண்டு நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பனம்பொருள் அபிவிருத்திச் சபை திட்டமிட்டிருக்கிறது. பனம்பொருள் அபிவிருத்திமூலம் பொருளாதாரத்தைவிருத்தி செய்வதுடன் சீவல் தொழில்காரணமாகச் சமூகத்தில் ஒரு பகுதிமக்களை ஒதுக்கி வைத்துள்ள சமூகக் குறைபாடுகளை நீக்குவதும் அபிவிருத்திச்சபையின் திட்டமாகும்.

பனம் பொருள் அபிவிருத்திச்சபையின் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் நிதி உதவி அளிப்பதுடன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்குவதற்கு வடபகுதி எம் பிக்களும் சம்மதமளித்திருக்கின்றனர்

அரசாங்கமும் எம். பி.க்களும் உதவியும் ஒத்துழைப்புமளித்தால் போதாது பொதுமக்களும் குறிப்பாக இளைஞர்களும் பூரண உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க முன்வரவேண்டும். எந்தத் திட்டமும் பொதுமக்களின் ஒத்துழைப்பில்லாமல் வெற்றிபெற முடியாது என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

---

தற்போது உனக்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதங்களைக் குறித்து மகிழ்ச்சி கொள்-கடந்து போன கஷ்டங்களைப் பற்றி கவலைகொள்ளாதே எல்லா மனிதருக்கும் இதில் கொஞ்சமாகிலும் அனுபவமுண்டு.

—சார்ல்ஸ்டிக்கன்ஸ்

### "சர்வாதிகாரியே திரும்பிப்போ!"
### -- விமான நிலையத்தில் கோஷம்

# இந்திரா காந்திக்கு லண்டனில் வரவேற்பும் ஆர்ப்பாட்டமும்

## பின்கதவால் வெளியேறினர்



லண்டன், நவ. 13

**முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று லண்டன் வந்தபோது விமானநிலையத்தில் ஆதரவாளர்களாலும் இரு நாட்டு அதிகாரிகளாலும் அன்பாக வரவேற்கப்பட்ட அதேவேளையில் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றது**

ஆர்ப்பாட்டம் காரணமாக திருமதி காந்தி விமானநிலையத்தின் பின்வர்சலால் வெளியேறினர்.

லண்டனில் நடைபெற உள்ள ஜவஹர்லால் நேருவின பிறந்தினவிழாவில் கலந்து கொள்வதற்காக 8 நாள் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு லண்டன் வந்த திருமதி காந்தியை பிரிட்டனிலுள்ள இந்திய உதவித் தூதுவரும் பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகளும் விமானநிலையத்தில் வரவேற்றனர். இந்திராவின் ஆதாவாளர்களும் பெருமளவில் கூடி நின்றனர்.

''பாஸிஸவாதியே! இந்திய சர்வாதிகாரியே திரும்பிப் போ!'' என்று விமானநிலையத்தில் ஆர்ப்பாட்டம் செய்த இந்தியர்கள் கோஷம் எழுப்பினர். இதைஅடுத்தே திருமதி காந்தி விமானநிலையத்தின் பின்கதவால் வெளியேறினர்

''இந்திராகாந்தி பாஸிஸவாதி, வீடு திரும்பு நாஸி! என்றும் ஆர்ப்பாட்டக்காரர் கோஷமிட்டனர்.

**கூட்டங்களைக் குழப்ப திட்டம்**

இதேவேளையில் பிரிட்டனில் திருமதி காந்தி கலந்து கொள்ளும் கூட்டங்களையும் குழப்புவதற்கு விமானநிலையத்தில் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் திட்டமிட்டுள்ளனர் என்றும் லண்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

### தொடர்ந்து சண்டை

நைரோபி, நவ 13

உகண்டா- தன்சானி எல்லையில் இருநாட்டுப் படைகளுக்குமிடையே பலத்த சண்டை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. (இ)

# நெருக்கடி நிலை சரியானதே

## லண்டனில் இந்திரா வாதம்

லண்டன், நவ. 13

தமது ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் அமுல் செய்யப்பட்ட அவசரகாலச்சட்டம் சரியானதே என்று திருமதிகாந்தி லண்டனிலும் கூறியுளளார்.

லண்டன் விமான நிலையத்தில் நிருபர்கள் மத்தியில் உரைநிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

இந்திய அரசியலில் சிக்மகளூர் தேர்தல் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லையாதலால் அந்த இடைத்தேர்தல் முடிவு அவ்வளவு முக்கியமானதல்ல என்றும் திருமதி காந்தி தெரிவித்தார்.

லண்டனில் தங்கியிருக்கும் நாட்களில் திருமதி இந்திரா காந்தி, பிரதமர் திரு ஜேம்ஸ் கலகன், எதிர்க்கட்சித் தலைவி திருமதி மார்க்கரெட் தட்சர், முன்னாள் பிரதமர் திரு எட்வேட் ஹீத் ஆகியோரையும் சந்திப்பார்.

# கிராமாபிவிருத்திக்கு ச.ச.நிலையங்களின் சேவை

## பயன்படுத்த அரசு விரும்புகிறதாம்

(பண்டத்தரிப்பு)

''கிராமிய மட்டத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்தச் சனசமூகநிலையங்களின் சேவையைப் பெறுவதற்கு இன்றைய அரசு விருப்புகிறது இதுவரை கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டுவந்த முக்கியத்துவத்தைச் சனசமூக நிலையங்களுக்கும் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவற்றை இப்பிரதேசத்திலுள்ள சனசமூகநிலையங்கள் நன்கு பயன்படுத்தித் தங்கள் பகுதிப் பொருளாதார, சமூக, கலாச்சார விஷயங்களில் அதிக அக்கறையுடன் ஈடுபடவேண்டியது அவசியமாகும்.''

இவ்வாறு வலி-தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே கோபாலரத்தினம், யாழ். மாவட்டச் சனசமூகநிலையங்களின் சமாஜ வலி-தென் மேற்குக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். சண்டிலிப்பாய் வலி-தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்கள் மேற்பார்வை அதிகாரி திரு வ. கிருஷ்ணசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''மக்களின் உடல், உள, ஆன்மீக வளர்ச்சிக்கு நல்ல சூழல் மிகவும் முக்கியமாகும். சனசமூகநிலையங்கள் மக்களின் சமுதாயச் சூழ்நிலை நல்ல முறையில் அமைவதற்குப் பெரும் தொண்டாற்றகூடியவையாகும். விளையாட்டுப் போட்டிகள், கலைகலாச்சார நிகழ்ச்சிகள், சிரமதானங்கள் போன்றவற்றைச் சனசமூக நிலையங்கள், தங்கள் பகுதிகளில் அடிக்கடி ஒழுங்கு செய்து நடாத்துவதன் முலம் நல்ல சூழல்களை ஏற்படுத்திச் சேவையாற்ற முடியும்.''

யாழ்ப்பாண மாவட்டச் சனசமூகநிலையங்களின் சமாஜ உப தலைவர் பண்டிதர் க. யோ. ஆசிநாதர் பேசுகையில் மற்றெந்தச் சங்கங்களிலும் பார்க்கச் சனசமூகநிலையங்களே மக்களிடம் அதிக தொடர்புகளை நேரடியாகக் கொண்டுள்ளன என்றும், மக்கள் இயக்கமான இந்நிலையங்களை மேலும் சிறந்த முறையில் அரசின் உதவியுடன் அபிவிருத்திசெய்து முன்னேறச்செய்ய இங்கு ஆரம்பிக்கப்பட்ட வலி-தென்மேற்குக் கிளை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் கூறினர்.

கிளை நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: எம். சி. முருகேசு (நவாலி முரசொலி சனசமூகநிலையம்), செயலாளர்: என். எம். கந்தசாமி (பண்டத்தரிப்பு திருக்குறள் சனசமூகநிலையம்), பொருளாளர்; எஸ். ஆனந்தஈஸ்வரன் (சித்திரைமேழி சனசமூகநிலையம்). 9 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (அ)

### வேலை நிறுத்தம்: 80 கோடி டாலர் நஷ்டம்

தெஹ்ரான், நவ. 13

ஈரானில் தொடர்ந்து நடைபெற்றுவரும் எண்ணை ஊழியர்களின் வேலை நிறுத்தத்தினுல் அரசுக்கு இதுவரை 80 கோடி டாலர் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என ஈரான் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

### இந்திராவுக்கு எதிராக பத்திரிகைகள்

லண்டன், நவ. 13

திருமதி காந்திக்கு எதிராக பிரிட்டிஷ் பத்திரிகைகள்பலஆசிரியத் தலையங்கங்கள் எழுதியதாக லண்டன் செய்திகள் தெரிவித்தன. (இ)

# இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்திய அரசு தலையிடாது

## லண்டனில் எம். ஜி. ஆர்.

லண்டன், நவ. 13

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்திய கூரசு தலையிடமாட்டாது. அவ்வாறு தலையிடுவது சர்வதேசப் பொதுவிதிகளுக்கு முரணானது.

இவ்வாறு தமிழக முதல்வர் திரு. எம் ஜி. இராமச்சந்திரன் லண்டனில் கூறினர்.

வாஷிங்டன் செல்லும் வழியில் திரு. இராமச்சந்திரனுக்கு லண்டன் தமிழ்சங்கம் இம்மாதம் 4ம் திகதி லண்டன் பாரதீயா வித்யா பவனத்தில் வரவேற்பு உபசாரம் ஒன்றை அளித்தது

இலங்கை வாழ் தமிழரின் பிரச்னைகளுக்கு முடிவுகாண எவ்வாறு உதவுவீர்கள்? ஐக்கியநாடுகள் சபையில் குரலெழுப்பி அவர்களுடைய பிரச்னைகளை விளக்குவீர்களா? என வைபவத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கையில், முதலமைச்சர் கூறியதாவது!

இந்திய அரசாங்கம் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவது சர்வதேசப் பொதுவிதிகளுக்கு மாறானது. ஐ நா. உபகுழுவின் அனுமதியின்றி நாம் எத்தீர்மானத்தையும் கொண்டுவரமுடியாது மேலும் இலங்கையின் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்தன அண்மையில் இந்திய அரசாங்கத்துடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் பயன்காலக்கிரமத்தில் வெளிவரும்.

திரு. இராமச்சந்திரன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

13 வயது தொடக்கம் 'அண்ணா'வைத் தெய்வமாகக் கருதி வருகின்றேன். தமிழ்நாட்டில் சமீபத்தில் நிலவிய தொழிலாளர் கலவரங்கள் சாதிச்சண்டைகள் முதலியவற்றால் ஏற்படும் தீங்குகளையும், இவற்றால் பொதுமக்களுக்கு ஏற்படும் நஷ்டங்களையும் தவிர்க்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

தமிழ்நாட்டில் தொழில் அபிவிருத்திசெய்வதை முன்னிட்டு பலதேசங்களிலுள்ள தொழில் ஸ்தாபனங்களைப் பார்வையிட்டுப் பயன்பெறும் முகமாக மெக்சிக்கோ, அமெரிக்கா, கனடா முதலிய நாடுகளுக்குப் விஜயம்செய்ய வேண்டி ஏற்பட்டது.

இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கு வரும் தமிழ்மக்களுக்குக் குடியிருக்க நிலமும், தொழிலாற்ற உதவியும் பண உதவியும் அரசாங்கம்செய்து வருகிறது.

லண்டன் தமிழ்ச்சங்கத்தார் சீரியமுறையில் தமிழ் அறநிலையம் அமைத்து அதன்மூலம் தமிழ்நாட்டு அரசுடன் தொடர்புகொண்டால் தாம் உதவியாக ஆவன புரிந்து நல்குவதாகவும் முதலமைச்சர் உறுதி கூறினர்.

முதலமைச்சரை வரவேற்றுப்பேசிய சங்கத் தலைவர் டாக்டர் தம்பையாபிள்ளை தமது உரையில், லண்டன் தமிழ்ச்சங்கம் 40 ஆண்டுகளுக்கு மேல் இயங்கிவருவதையும் அதற்கென ஒரு கட்டடம் அவசியம் தேவை எனவும், ஆவன உதவி நல்குமாறும் முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

அடுத்து சங்கத்தின் துணைத் தலைவர் திரு. க. ரங்கநாதன் பேசுகையில், முதலமைச்சர் முன்பு லண்டன் தமிழ்ச்சங்கத்துக்கு முதன் முதல் நிதியளித்த பேருபகாரி எனவும் இச்சங்கம் 1960ம் ஆண்டு தொடக்கம் பதிவு செய்யப்பட்ட சங்கமாக இருந்துவருகிறது எனவும் குறிப்பிட்டார்.

இறுதியாக துணைச்செயலாளர் திருமதி தங்கரத்தினம் முத்துக்குமாரசுவாமி நன்றி கூறினர். (இ)

# நல்லூர் சிவாவுக்கு மாணவர் நன்றி

(கோண்டாவில்)

ஐந்துபேர்கொண்ட பல்தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் குழு ஒன்று நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு.சிவசிதம்பரத்தைச் சந்தித்தது.

பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மசோதாமீது பேசும்போது முக்கியமாக 118ம் ஷரத்தை நீக்க வேண்டும் என வலியுறுத்தியதற்காக மாணவர் குழு நன்றிதெரிவித்துக்கொண்டது. தங்களுக்கென மாணவ மன்றம் ஒன்றை அமைத்துத் தரும்படியும் அவர்கள் கேட்டுக் கொண்டனர். மாணவர் குழுவிற்கு திரு.நா.நவரத்தினராஜா தலைமைவகித்தார்.


Rio (Jaffna)
Daily 4 Shows
Sean Connery
RANSOM

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
பெண் தெய்வம்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
முத்துராமன்-சுஜாதா
முத்தான முத்தல்லவோ


## இடமாற்றம்

(வவனியா)

வவனியா பொலிஸ் அத்தியட்சகர் திரு சந்திரா மென்டிஸ் கேகாலை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் திரு. பிந்துகுமார் வவனியா பொலிஸ அத்தியட்சகராக இடமாற்றம் பெற்றுள்ளார். (உ)


SHANTHI JAFFNA. Phone : 7642
Daily 10-30, 2-30, 6-30, 9-45.
Irangani... Sera Singha...
— Sinhalese — சிறந்த சிங்களப் படம் —
"Janaga Saha Manju"
Screening Shortly "Blood Money"

மனோகரா [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்- ஜெயலலித -ஸ்ரீகாந்த் சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

15-11-78வரை மட்டும்
ராஜா (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்
16-ந் திகதி முதல் பந்தபாசம்

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
Sidney James, Kenneth Williams
in
'CARRY ON MATRON'
(Color)

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஜெய்சங்கர், சுஜாதா நடித்த
நீ ஒரு மகராணி
(புதியபிரதி)

லிடோ (யாழ்.நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

வின்ஸர் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள் போன்: 466
3-வது ஜனத்திரள் வாரம்
ஃ சிவராம் ஃ சந்திரகலா ஃ தனரத்தினம் நடித்த
அநுராகம்
சிவாஜிகணேசன்
பைலட் பிரேம்நாத்
இலங்கை விஜயம்பற்றிய செய்திப்படம்


# போயாதினத்தை முன்னிட்டு சினிமாக் காட்சிகள் இல்லை

## இரசிகமணி நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் இரசிகமணி நினைவுதினமும் இம்மாதம் 16ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

கவிமணி வி. கந்தவனம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் யாழ். வளாகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. சுப்பிரமணியம் இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுச் சொற்பொழிவு நிகழ்த்துவார். கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை வரவேற்புரையும், திரு. பொன். சோமசுந்தரம் தொடக்கவுரையும் நிகழ்த்துவர். (அ)

## இன்று

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்கம் நடத்தும் ஆராய்ச்சி விரிவுரை இன்று செவ்வாய் காலை யாழ். பெரியகடை பாரதி பாஷிய வித்தியாலயத்தில் நடைபெறுகிறது. இவ்விரிவுரையைப்பண்டிதர் த. கிருஷ்ணபிள்ளை நிகழ்த்துவார் இதனையடுத்துக் கருத்தரங்கு நடைபெறும்.

●

இலங்கை சோவியத்நட்புறவுச்சங்க யாழ். கிளை சார்பில் அக்டோபர் புரட்சியின் 61வது ஆண்டு புரட்சிவிழா இன்றுபிற்பகல் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படுகிறது. ஆனைப்பந்தி உயர்கலைக்கல்லூரியில் திரு.ஆ.தியாகராசா தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் காலநிதி கா. சிவத்தம்பி திருவாளர்கள் பொன்.குமாரசாமி அ.வயித்திலிங்கம் எஸ். கணேசன் எம். ஸி. சுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றுவார்.

சோவியத்மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் திரைப்படமும் காண்பிக்கப்படும். [அ]

## யாழ்ப்பாணத்தில் சோதிடக்கலாநிதி

(யாழ்ப்பாணம்)

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணத்தில் தங்கிச் சிகிச்சை பெற்றுவருகிறார். கந்தர்மடம் ஆத்திகுடி வீதி 56/16ம் இலக்க இல்லத்தில் தங்கிச் சிகிச்சை பெற்றுவரும் சோதிடக்கலாநிதி இருமாத காலம் யாழ்ப்பாணத்தில் இருப்பார் என்று அவரது செயலாளர் தெரிவித்தார். (அ)

## யாருடையது?

யாழ். மாநகர சபைக்கு முன்பாக, மோட்டார் வாகனத்தின் இரண்டு சிறிய திறப்புகள் பி. செல்வராசா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' அலுவலகத்தில் நேற்று ஒப்படைக்கப்பட்டன. உரியவர்கள் அத்தாட்சியுடன் பெற்றுக்கொள்ளவும்.

## தமிழ்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

லும்தான் நாம் வகுப்புகள் நடத்தினோம். ஆனால் அவர் குறிப்பிடும்படிக்கு வகுப்புகள் பின்வருமாறு:

1. சுதந்திரம் என்றால் என்ன? 2. பொருளாதார நெருக்கடி. 3. தமிழருக்கு பாதகமான இந்திய விஸ்தரிப்புவாதம். 4. இடதுசாரிகளின் தவறான பாதை. 5. மக்கள் விடுதலை முன்னணியின் பாதை.

மக்கள் விடுதலை முன்னணியின் 3ம், 4ம், 5ம் வகுப்புகளுக்கான தலைப்புகளை அவர் எவ்வளவு தூரம் தான் தோன்றித்தனமாக திரித்துக் கூறியுள்ளார் பார்த்தீர்களா.

[மிகுதி நாளை]

### சென்.பற்றிக்ஸ் - சென்ஹென்றிஸ்உதைபந்தாட்டம்

# ஹென்றீஸ் விளையாட்டு ஆசிரியரின் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென். பற்றிக்ஸ்- இளவாலை சென். ஹென்றீஸ் உதைபந்தாட்டப் போட்டி குறித்து 'ஈழநாடு' இதழில் வெளிவந்த செய்தி தொடர்பாக சென்.ஹென்றீஸ் கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு எஸ்.ஏ. இமானுவெல் அளித்துள்ள விளக்கம் வருமாறு:

2-11-78 ஈழநாட்டில் 'சென் பற்றிக்ஸ் வெற்றி - சென். ஹென்றீஸ் வெளிநடப்பு' என்னும் தலையங்கத்தில் வெளிவந்த செய்தியைப்படித்து அதிர்ச்சி அடைந்தோம். உண்மையை நேரில் கண்டவர்கள் மத்தியில்எமதுகல்லூரி பற்றி தப்பபிப்பிராயததையும் உண்டாக்குவதால், இக்கறையை நீக்கவும், நடந்தவற்றைத் தெளிவுபடுத்தவும் இதை எழுதுகிறேன். இந்த ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கோஷ்டிக்கு வெற்றியெனத் தீர்ப்பிட மத்தியஸ்தருக்கோ அன்றேல் வேறு எவருக்கோ அதிகாரமில்லை. இடைவேளையின்பின்- 18 நிமிடங்களின் பின் சென். ஹென்றீஸ்கோஷ்டி வெளிநடப்புச் செய்ததெனக் குறிப்பிடப்பட்டது தவறு. இப்போட்டியின்போது இடைவேளையின்பின் 7ம் நிமிடத்தில்தான் வெளிநடப்பு இடம் பெற்றது. ஆனால் வெளிநடப்புச் செய்ததற்கான காரணங்கள் பின்வருமாறு:

ஆட்ட ஆரம்பத்திலேயே சென். ஹென்றீஸ் முதல்கோல் போட்டபோது மத்தியஸ்தர் அதை நிராகரித்தார்.

சென். பற்றிக்ஸ் வீரர் சிலரை வெளியே அனுப்புவதற்கான சந்தர்ப்பங்கள் தக்கது. இருந்தும், மாறாக ஹென்றீஸ் வீரரை எச்சரித்தமை ஹென்றீஸ் வீரர்களிடையே திகிலை ஊட்டிற்று.

சென். ஹென்றீஸ் வீரர்கள் பந்துடன் சென் பற்றிக்ஸ் கோல்காப்பாளரை அணுகிய இருசந்தர்ப்பத்தில், சென். பற்றிக்ஸ் வீரர்கள் அவர்களின் அங்கிகளைப் பிடித்து இழுத்துவீழ்த்தினர். இவ்விரு வேளைகளிலும் 'பெனல்டி' கொடுக்கமத்தியஸ்தர் நினைக்கவில்லை.

சென். ஹென்றீஸ் கோல் காப்பாளர் பந்தைப் பிடிக்கும் போதெல்லாம் சுற்றி நின்ற சிலர் கல் எறிந்தும், வெடி கொளுத்தி எறிந்தும் பயமுறுத்தினா.

இது சிநேகபூர்வமான போட்டியாயிருந்தும், சென். ஹென்றீஸ் வீரர்களையும் பயிற்சியாளர்களையும் பற்றி, சென் பற்றிக்ஸ் மாணவர்கள் கேவலமாகக் கூக்குரலிட்டு சீழ்க்கையடித்தனர்.

இடைவேளையின்பின் ஆறுவது நிமிடத்தில் சென் பற்றிக்ஸ் கோல்காப்பாளர் பந்துடன் (யாராலும் தள்ளப்படாமல் தானாக) வலைக்குள் வீழ்ந்தும், மத்தியஸ்தர் அது கோலெனத் தீர்ப்பளிக்கவில்லை.

இதன்பின் தொடர்ந்து விளையாடுவதில் பயனில்லையென அறிந்தே நாம் எமது கோஷ்டியை வெளியேவரும்படி இடைவேளையின்பின் ஏழாவது நிமிடத்தில் அழைத்தோம். இதன்முன்பு நடைபெற்ற 2ம், 3ம் பிரிவுப்போட்டிகளில் சென். ஹென்றீஸ் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது. [இ]

# 'ஆத்திரம் உண்டானாலும் சட்டத்தை மீறுவதா?"

## தாக்குதல் வழக்கில் நீதிபதி

(வேலணை)

ஆத்திரம் ஊட்டப்பட்டாலும் சட்டத்தை யாரும் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளக்கூடாது. இவ்வழக்கில் ஆத்திரம் ஊட்டப்பட்ட நிலையில் நீர் முறைப்பாட்டாளரைத் தாக்கியிருக்கின்றீர் என்பதை கவனத்திற் கொண்டே தண்டனையை விதிக்கிறேன்''.

இவ்வாறு ஊர்காவற்றுறை நீதிபதி வை. ஜெகசோதி றிசேவ் பொலிஸ் உத்தியோகத்தர் தாக்குதல் வழக்கில் 2ம் எதிரியைப் பார்த்துக் கூறினார்.

வேலணை கிராமிய வங்கியில் கடமையில் இருந்த றிசேவ் பொலிஸ் கான்ஸ்டபிள்ளான தியாகநாதனை கடமையைச் செய்யவிடாமல் தடைசெய்ததாக மூன்று இளைஞர்மீது தொடரப்பட்ட வழக்கின் விசாரணை நடுவில் 2ம் எதிரி ஆத்திரம் ஊட்டப்பட்டதால் குற்றம் புரிந்தாக ஒப்புக் கொண்டார்.

வேலணையைச் சேர்ந்த பொன்னம்பலம்மாசிலாமணி, பொன்னம்பலம் நடராஜமணி, சிறிகந்தராசா ஆகியோர் மீது ஊர்காவற்றுறைப் பொலிசார் இவ்வழக்கைத் தாக்கல் செய்திருநதனர்.

முறைப்பாட்டாளரான தியாகநாதன் எதிரி தரப்புச் சட்டத்தரணிகளால் நீண்ட நேரம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். 2ம் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

கிராமிய வங்கியில் நின்ற ஜனங்களை ஒழுங்காக நிற்கு மாறு உத்தரவு இட்டபோதே சம்பவம் நடைபெற்றதாக சாட்சி தெரிவித்தார்

இதனைத் தொடர்ந்து முதலாம் மூன்றும் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். இரண்டாம் எதிரிக்கு 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸ் சார்ஜண்ட் நடராஜா வழக்கை நடாத்தினர். முதலாம் எதிரி சார்பில் சட்டத்தரணி ப. கதிரவேலும் 2ம், 3ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ந. சிறிகாந்தாவும் ஆஜராகி இருந்தனர். (உ)

## "நம்கடமை"

(சுழிபுரம்)

''நல்ல பணிகள் செய்யும் பொதுஇயக்கங்களுக்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் கொடுக்க வேண்டியது எங்கள் கடமையாகும். ஒழுக்கம், கல்வி, தொண்டு ஆகிய பணிகளை இளையோர் உள்ளங்களில் பதியவைப்பதற்கு வழக்கம்பறை சனசமூக பஜனைச் சபையார் செய்துவரும் சேவையை நாம் அறிவோம். இவ்வாறு சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலை அதிபர் திரு. ச. சிதம்பரப்பிள்ளை சுழிபுரம் பறளை சிவசுப்பிரமணிய சுவாமிகோயில் வசந்த முன்மண்டபத்தில் கந்தரலங்கார, கந்தரனுபூதி பரிசளிப்பு விழாவுக்கு தலைமைவகித்துப பேசியபோது குறிப்பிட்டார்.

திரு. ச. சிதம்பரப்பிள்ளை மேலும் பேசுகையில், கல்வி நிலையங்களுக்கு மேலாக வழக்கம்பரைசனசமூகபஜனைச் சபையினர் சேவைசெய்து வருகின்றனர். இளையோர் உள்ளங்களில் நல்லவிதைகளை விதைத்தால் பயன் நல்லவையாகவே இருக்கும். சபைச் செயலாளர் திரு. வ. வாமதேவன் வரவேற்புரை நிகழ்த்தினர், சமயப்பிரசாரகா கேணு நடராசாவும் பேசினர். திரு. மு தாமோதரம்பிள்ளை போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினர். போட்டி அமைப்பாளர் திரு. மு. தம்பியையா ஆசிரியர் நன்றியுரைகூறினர். (உ)

# "சுதந்திரவர்த்தக வலயம் நாட்டை அழிக்கும்திட்டம்"

-- வி. பி.

(யாழ்ப்பாணம்)

''நம் நாட்டில் ஆரம்பிக்கப்படுகின்ற சுதந்திர வர்த்தக வலயத் திட்டம், நம் நாட்டுப் பொருளாதாரத்தைச் சூறையாடி, மக்களையும் நாட்டையும் அழிக்கும் திட்டமாகவே அமையும்'' அரியாலை காந்தி சனசமூகநிலைய வெள்ளி விழா அரங்கில் 'சுதந்திர வர்த்தக வலயம்' பற்றி நடைபெற்ற கருத்தரங்கில் செந்தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் திரு. வ. பொன்னம்பலம் கூறினர்.

திரு சி சந்திரமோகன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''இன்றைய அரசு, சுதந்திர வர்த்தகவலயம், தேசிய வீடமைப்பு, மகாவலி அபிவிருத்தி போன்ற பெரும் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் மக்களின் சகல பிரச்னைகளையும் தீர்க்கமுடியுமென நம்புகிறது. இன்று 12 லட்சம் பேர் வேலையின்றி இருக்கிறார்கள். மாதப் படியாக 50 ரூபா கொடுப்பதன் மூலம் அரசாங்கம் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்க வேண்டியுள்ளமையை அது மறைமுகமாக ஒப்புக்கொள்வதாக அமைகிறது.

''இந்நிலையிலேயே அரசாங்கம் சுதந்திர வர்த்தக வலயத் திட்டம் செயல்படுவதன் மூலம் அதிகமானோர் வேலைவாய்ப்பைப் பெறமுடியுமென்ற கருத்தைப் பரப்ப முயன்றுள்ளது. ஆனல் உண்மை நிலையென்ன?

''சுதந்திர வர்த்தக வலயப் பிரதேசம், கொழும்பு அகண்ட அபிவிருத்திப் பிரதேசத்தில் மாத்திரமல்ல, விரும்பினல் நாட்டின் எந்தப் பகுதியிலும் அமையமுடியும். குறிப்பிட்ட பிரதேசத்துள் முதலிடுசெய்யும் வெளிநாட்டாரின் முதலீட்டைப் பாதுகாக்க வேலை நிறுத்தம் செய்யும் உரிமை, கூலிப் பிரச்னை, பத்திரிகை வெளியிடுதல் என்பன தடை செய்யப்படுகின்றன், நாட்டின் பிற பகுதிகளிலுள்ள தொழிற் சட்டங்கள் இப்பிரதேசத்தினுள் செல்லுபடியாகாது. இதனல் நம்மக்களின் உழைப்பு குறைந்த ஊதியத்துக்கே அங்கு வழங்கப்படும்.

''வங்கிகளை யாரும் திறப்பதற்கு அனுமதி உண்டு. நம் நாட்டவரும் வங்கிக்கணக்கு வைக்கலாம். இதனல் அரசுக்குத் தெரியவராமலே பண மோசடிகள் இடம்பெற வாய்ப்புண்டு. வங்கிகள் தேசியமயமாக்கியதன் மூலம் நாடும், மக்களும் பெற்ற லாபங்கள் இதனல் இழந்து போக வழி வகுக்கப்படும்.

''சுதந்திர வர்த்தக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சுதந்திரவர்த்தக வலயத்தில் முதலிடும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பூரணசுதந்திர நிலையில் இயங்குவதால் நமது நாட்டுப் பொருளாதாரம் சூறையாடப்படும் என்பதில் சந்தேகமில்லை.

உலகில் பொருளாதார வசதிகொண்ட நாடுகளில் இம்மாதிரிவலயங்கள் இல்லை. ஆசிய நாடுகளில் அதுவும் சோசலிச சமூக அமைப்பற்ற மலேசியா, சிங்கப்பூர், கொங்கொங் பிலிப்பைன்ஸ்போன்ற மன்னர் ஆட்சிஅமைப்புக்களைக் கொண்ட நாடுகளிலேயே இம்முறை அமைந்துள்ளது. சுதந்திரதுறைமுகம், சுதந்திர வர்த்தகவலயம் என்ற பெயரில் அமைப்பில் வித்தியாசம் இருப்பினும், பொருட்கள் தாராளமாக புழக்கத்தில் இருப்பினும் இத் திட்டங்கள் ஆரம்பித்துப் சுமார் 25 வருடங்களின் பின்பும் இந்நாட்டு மக்கள் முன்னேற்றம் அடைந்தது கிடையாது. பத்திரிகைச்சுதந்திரம் வேலை நிறுத்தம் கூலி உயர்வு போன்ற மனித உரிமைகள் இந்நாடுகளில் இல்லை.

சுதந்திரவர்த்தகவலயங்களில் தொழில் நுட்பங்கள் கூடுதல் அடையும். அதனல் உத்பத்திகள் பெருகும் ஆனல் அதிகமானோர் தொழில்பெறும் வாய்ப்பினை இழப்பர், பொருட்கள் நாட்டின் வீதிகளில் குவிந்துவிடும். ஆனல் அதனல் வரும் லாபத்தை மக்கள் அல்ல, முதலீடுசெய்தவர்களே பெற்றுத் தமது தாயகம் கொண்டுசெல்வார்கள். இதனல் மக்களுக்கு எப்படி நன்மை உண்டாகும்? பொருட்களை வாங்கும் சக்தியைக்கூட மக்கள் இழந்து நிற்பர்.

இன்று எமது தேசத்தில் 'பட்டர்' முதலாக 'வெங்காயம்'வரை இறக்குமதியாகி குவிந்துகிடக்கின்றன. ஆனல் வாங்குவதற்கு மக்களிடம் பணம் இல்லை. கிடைக்கும் பணத்தையும் மூடையாகக் கட்டிக்கொண்டுபோனல்தான் சட்டைப் 'பொக்கற்றில்' பொருட்களை வாங்கிவர முடிகிறது.

விலைவாசி விஷம்போல ஏறுகிறது. இவ் விஷத்தைக் குறைக்கச் சரியான கொள்கைகள் இல்லாததினல்தான் இந்த சுதந்திர வர்த்தக வலய ''ஊயினிங்'' ஓடுகிறார்கள்.

[ஊ]

## அமைதியான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் கட்டுநாயக்கா விமானநிலையம் வந்துசேர்ந்தனர்.

விமானநிலையத்தில் அமிர் தம்பதிகளுக்கு நேற்றுமாலை அமைதியான வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமானநிலையத்தில் பத்திரிகை நிருபர்கள் பல கேள்விக்கணைகளைத் தொடுத்தனர்.

''நான் வெளிநாடுகளில் பேசியது குறித்து இங்கு பலவிதமாகக் கூறப்பட்டுள்ளது உள்நாட்டு விஷயங்களை நான் முதலில் தெளிவாக அறிய வேண்டும். அதற்கு முன்னதாக அறிக்கை எதுவும் வெளியிடவிரும்பவில்லை. பல இடஇடங்களில் எமது நிலைபற்றி பூரணமாக விளக்கவேண்டியிருந்தது அவ்வெல்லாம் இப்பொழுது எமது கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர்'', என்று திரு அமிர்தலிங்கம் சுருக்கமாக நிருபர்களிடம் கூறினர்.

### பொலிஸ் பாதுகாப்பு

விமான நிலையத்திலும், நீர்கொழும்பு வீதியிலும் பலத்த பொலிஸ் காவல் போடப்பட்டிருந்தது.

'அமிரி'ன் உத்தியோக இல்லத்தில் பூரண கும்பம்வைத்து "அமிர்" தம்பதிகள் வரவேற்கப்பட்டனர். பெருந்திரளாக மக்கள் இங்கு வந்திருந்தனர்.

### யாழ் விஜயம்

அமிர்தலிங்கம் தம்பதிகள் 18-ந் திகதி சனிக்கிழமை காலை ரயில் மார்க்கமாக யாழ்ப்பாணம் செல்கின்றனர்கள்.

பாராளுமன்றக் குழுக் கூட்டம் நாளை புதன்கிழமை நடைபெறுகிறது. [ம]

## திருத்தம்

'பொருட்கள் மீட்கப்பட்டன மூவர் கைது' என்ற தலைப்பில் 14-10-78ல் வெளியான "ஈழநாடு" இதழில் வெளிவந்த செய்தியில் களவுபோன பொருட்களின் பெறுமதி 788 ரூபா என்பதற்குட் பதிலாக 4,500 ரூபா என்றும் சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்படாத போதிலும் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்கள் என்றும் தவறுதலாகப் பிரசுரமாகியுள்ளதற்கு வருந்துகிறோம்.

கிளிநொச்சி நீதிபதி திரு. இராஜநாதன் முன்னிலையில் மேற்படி களவு சம்பந்தமான வழக்கு 9-11-78 வியாழக்கிழமை விசாரணைக்கு மீண்டும் எடுக்கப்பட்ட போது இத் திருத்தங்களை வெளியிடும்படி நீதிபதி பணித்தார். இவ்வழக்கில் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி எம். ஆலாலசுந்தரம் ஆஜராகியிருந்தார்.

(ஆ—+.)

## கல்விப் பணிப்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

தேவையான கட்டட உபகரண வசதிகளையும் வேறு வசதிகளையும் இவ்வருட இறுதிக்குள் பூர்த்திசெய்வதாக உறுதியளித்தார்.

மோட்டார் இயந்திரவியல் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களையும் தரு. பதிவிகார வழங்கினர்.

ஆசிரிய மாணவர்கள் மத்தியில் உரை நிகழ்த்துகையில் எதிர்கால சந்ததியினரை நற்பிரஜைகளாக உருவாக்கும் ஆசிரியர்களது பெரும்பணி குறித்து அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

அதிபர் திரு. கே. ஜெயராஜா கல்விப்பணிப்பாளரை வரவேற்று உரைநிகழ்த்தினர், (இ)

## அரசுடன்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ளேன். இதனையும் பகிரங்கமாகவேசெய்துள்ளேன். பகிரங்கமாகவே பேசியுள்ளேன். ஒரு உண்மையைச் சொல்லும் போது ஏன் அஞ்சவேண்டும்?

கேள்வி: இந்த அரசிலும் பார்க்க, சிறிமா அரசாங்க காலத்தில் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இருந்தது என்று குறிப்பிட்டிருந்தீர்களே...

அமிர்: கடந்த ஆகஸ்ட் கலவரம் போன்று ஒரு பயங்கரம், சிறிமா அரசு காலத்தில் தலைதூக்கியதில்லை. ஆகஸ்ட் கலவரத்தின் போது தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இருக்கவில்லை. தமிழ் மக்கள் பாதுகாப்பற்ற உணர்வுடன் தான் இப்பொழுதும் வாழுகின்றார்கள்.

கேள்வி: பொதுவாக உங்களின் வெளிநாட்டு விஜயம் எவ்விதமாக அமைந்திருக்கிறது?

அமிர்: திருப்தியாக உள்ளது! தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாதையில்தான் தமிழர் பிரச்னையைத் தீர்க்க முடியும் என்பதையும், அதற்கான ஒரே மார்க்கம், தமிழ் ஈழம்தான் என்பதையும், தமிழீழம்தான் உறுதியான தீர்வு என்பதையும் வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் பூரணமாக உணர்ந்துள்ளனர். நான் மேற்கொண்ட நோக்கமும் இதுதானே...'' என்று கேட்டு நிருபர்கள் சந்திப்பை நேற்றிரவு முடித்துக் கொண்டார் "அமிர்." (ம)

## அரியாலை பன்னவேலை நிலையம்: 16 பெண்கள் தெரிவு

### அபிவிருத்திச் சபைக்கு அமைச்சர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

''குறுகிய காலத்தில் பனம்பொருள் அபிவிருத்திச்சபை. அரசாங்கத்தின் கட்டிடமொன்றை இலவசமாகப் பெற்று, இப்பயிற்சி நிலையத்தை ஆரம்பித்திருப்பது, அவர்களின் துரித செயற்திட்டங்களை எமக்கு காட்டுகின்றது''

இவ்வாறு பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் முதலாவது பன்னவேலை பயிற்சி நிலையத்தை அரியாலையில் திறந்துவைத்து உரையாற்றிய பெருந்தோட்டத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன குறிப்பிட்டார்.

அமைச்சர், அரியாலைதெங்கு பனம் பொருள் அபிவிருத்திச் சங்க மண்டப வாசலில், வைத்து மாலைகள்சூட்டி ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

விழாவிற்கு திரு. என் இராமலிங்கம் தலைமைதாங்கினர்.

அமைச்சர் திரு: ஜயவர்த்தன தொடர்ந்து உரையாற்றுகையில், ''இன்று இப்பயிற்சி நிலையத்துக்கு, 16 இளம் பெண்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் பயிற்சியை முடித்துக் கொண்டதும், கிராமரீதியாக பயிற்றுவிக்கும் ஆசிரியைகளாக அனுப்பப்படுவர், இவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் விரைவிலுண்டு'' என்றார்.

நிர்வாகசபை உறுப்பினா திரு. கே.நடராஜா உரையாற்றுகையில் ''சபை முதலாவது பன்னவேலைபயிற்சிநிலையத்தை இங்கு நிறுவியுள்ளது. இதன் ஆசிரியையாக திருமதி மகாலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். இதே மாதிரி பல கிராமங்களிலும் பயிற்சிநிலையங்களை நிறுவ முடிவுசெய்துள்ளோம். எமது பனம்பண்டங்களுக்கு உலகநாடுகளில் பெருமதிப்புண்டு. குறிப்பாக இவற்றை சிங்கப்பூரில், எமது சுளகு பல வெள்ளிகளுக்குவிற்பனை செய்யமுடியும். தனியார் துறையினர் பனம்பண்டங்களைச் சந்தைப்படுத்தி, தமிழ் மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தத் தவறிவிட்டனர். ஆனல் பனம்பொருள் அபிவிருத்திச்சபை, சிங்கப்பூர், மத்தியகிழக்கு நாடுகள், ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகளுக்கு பனம்பண்டங்களை ஏற்றுமதி செய்ய, 'ஏற்றுமதி கட்டளைகளுக்கு மாதிரிப்பொருட்களை அனுப்பவுள்ளது'' என்றார்.

[கெ-உ]

## இறுதி டெஸ்ட்

கராச்சி, நவ. 13

இந்திய—பாகிஸ்தான் மூன்றாவது இறுதி கிரிக்கெட் டெஸ்ட் இன்று செவ்வாய்க்கிழமை கராச்சியில் ஆரம்பமாகிறது.

முதல் டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததும், 2வது டெஸ்ட்டில் பாகிஸ்தான் 8 விக்கட்டுகளால் வெற்றிபெற்றதும் தெரிந்ததே. (இ)

## அகிலனுக்கு விருது

புதுடில்லி, நவ, 13

1978ம் ஆண்டுக்கானசோவியத்லாண்ட்நேரு விருது பிரபல தமிழ் எழுத்தாளர் திரு. பி. அகிலாண்டத்துக்கும் (அகிலன்) மற்றும் இருவருக்கும் வழங்கப்படவுள்ளது.

இந்த விருதைப் பெறுவதன் மூலம், இம்மூவருக்கும் பத்தாயிரம் ரூபா ரொக்கப்பணம் கிடைப்பதுடன், சோவியத் யூனியனில் இரண்டுவாரகாலம் சுற்றுப்பிரயாணமும் செய்யலாம்.

## 1440 பேர் பலி!

புதுடில்லி, நவ. 13

வடஇந்திய மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் மட்டும் இதுவரை 775 பேர் மூளைக்காச்சலுக்குப் பலியாகினர். என்று அறிவிக்கப்பட்டது.

இந்தியாவில் இதுவரை மூளைக்காய்ச்சலில் 1440 பேர்பலியாகினர் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றப் பௌர்ணமிக் கலைவிழா யாழ். திறந்த வெளியரங்கில் இன்று மாலை நடைபெறவிருக்கிறது ''பாதுகை'' ''சரிந்தமணிமுடி'' என்ற நாடகங்கள் இடம் பெறும்.

[உ]

## ஆங்கிலத்தில் அமைச்சர் வைபவம்

(புலோலி)

வடமராட்சி வதிரி பேரமானந்தா அனாதைகள் ஆச்சிரமத்திற்கு சமூக சேவைகள் அமைச்சர் திரு. அசோகா கருணாரத்தின, பிரதியமைச்சர் திரு. ஜே. எல். சிறிசேன ஆகியோர் அண்மையில் விஜயம் செய்தபோது அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே நடைபெற்றன. இதனல் அமைச்சரின் உரையை எதிர்பார்த்திருந்த ஆச்சிரமத்திலுள்ள அனாதைச் சிறுவர்களும், வயோதிபர்களும் அமைச்சரின் உரையை விளங்கிக் கொள்ளமுடியாதது மாத்திரமன்றி அங்கு வருகைதந்த பொதுமக்களும் திண்டாடினர்

## யாருடையது?

யாழ். ஸ்டான்லி வீதியைச் சேர்ந்த மா. இராசேந்திரம் என்பவரால் வீடோ தியேட்டர் முன்பாக கண்டெடுக்கப்பட்ட மாரியப்பன் மோகனதாஸ், என்பவரின் அடையாள அட்டையும் ஒரு புகைப்படமும் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் அத்தாட்சிகாட்டி பெற்றுக்கொள்ளவும்.

## கத்திமுனையில் வானொலி அபேஸ்!

(யாழ்ப்பாணம்)

வெளியே மழை பெய்து கொண்டிருந்த வேளையில் வீட்டினுள் பாடிக்கொண்டிருந்த வானொலிப் பெட்டி ஒன்று கத்தி முனையில் அபகரித்துச் செல்லப்பட்டதாம்.

இச்சம்பவம் கோப்பாய் தெற்கு நாவலடியைச் சேர்ந்த கனகசபை என்பவரின் இல்லத்தில் நடைபெற்றது

இரவு சுமார் 7 மணியளவில் வீட்டுக்குள் புகுந்த ஒருவர் வீட்டிலிருந்த கனகசபை என்ற வயோதிபரைக் கத்தி முனையில் பயமுறுத்திவிட்டு அங்கு பாடிக்கொண்டிருந்த சுமார் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான வானொலிப் பெட்டியை அபகரித்துச் சென்றுவிட்டாராம்

இதுகுறித்து கோப்பாய் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது. (இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 889, Registered as a Newspaper in SriLanka.